## ஒரு பார்வை - பகுதி 1

**மனிதனுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் அவன் விரக்தி அடைகிறான். இருப்பினும், மனிதனுக்கு அல்லாஹ் அருள் புரிந்தால் அவன் நன்றி இல்லாமல் அல்லாஹ்வை புறக்கணித்து, ஆணவமாக திரிகிறான் என்பதுடன் ஸூரா ஹாமீம் ஸஜ்தா முடிகிறது. இஸ்லாம் என்பது முந்தைய நபிமார்களுக்கு அருளப்பட்ட அதே மார்க்கம்தான் என்பதை வலியுறுத்தி ஸூரா அஷ்ஷூரா தொடங்குகிறது. அல்லாஹ் ஏன் எல்லா மனிதர்களையும் நல்லவர்களாக ஆக்கவில்லை என்ற கேள்விக்கான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. மறுமையை நாடுபவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குகிறான்; அதே சமயம் உலக வாழ்க்கையை மட்டுமே விரும்புவோருக்கு மறுமையில் பலன் இருக்காது.**

## தராவிஹ் - 21: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 41, ஹா மீம் ஸஜ்தா; வசனம்: 47 - 54; பிரிவு: 6

1. **நன்மையை வேண்டுவதில் மனிதன் சோர்வடைவதில்லை. ஆனால் அவனைக் கெடுதி தீண்டுமாயின், அவன் மனமுடைந்து, நம்பிக்கையிழந்து, நிராசையாகி விடுகின்றான். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 6)**

2. **எனினும் அவனுக்கு நேர்ந்த கெடுதிக்குப் பின் அல்லாஹ் அவனை தன் அருளைச் சுவைக்கச் செய்தால், அவன், "இது எனக்கு உரியது தான். யுகமுடிவு நாள் ஏற்படுமென நான் நினைக்கவில்லை. ஒருவேளை நான் என்னுடைய இறைவனிடம் திருப்பி அனுப்பப்பட்டாலும், நிச்சயமாக அவனிடத்தில் எனக்கு நன்மையே கிடைக்கும்" என்று திடமாகச் சொல்கிறான். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 6)**

3. மனிதனுக்கு அல்லாஹ் அருள் புரிந்தால் அவன் (நன்றி இல்லாமல்) அல்லாஹ்வை புறக்கணித்து விலகிச் செல்கிறான். ஆனால் அவனை ஒரு கெடுதி தீண்டினால், நீண்ட நெடிய துஆவோடு அல்லாஹ்வின் பக்கம் வருகின்றான். (ஸூரா - ஹா மீம்; பிரிவு: 6)

**ஸூரா - 42, அஷ்ஷூரா; வசனம்: 1 - 27; பிரிவு: 1 - 3**

4. நபியே! நூஹ்வுக்கு எதை அல்லாஹ் அறிவுறுத்தினானோ அதையே உங்களுக்கு மார்க்கமாக ஆக்கினான். மேலும் இப்ராஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோருக்கு எதனை உபதேசித்தானோ, அவை எல்லாமே ஒரே மார்க்கம்தான். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 2)

5. அவர்கள் அனைவருக்குமே சொல்லப்பட்டது என்னவென்றால், இஸ்லாம் மார்க்கத்தை நிலைநிறுத்துங்கள். இதிலே நீங்கள் பிளவுபட்டு விட வேண்டாம். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 2)

6. மக்களுக்கு அது பற்றிய ஞானம் வந்த பிறகும் கூட அவர்களுக்கு மத்தியிலுள்ள பொறாமையின் காரணமாக பிளவு படுத்திவிட்டனர். (கர்வத்தினால் ஒருவரின் உத்தரவுக்கு மற்றொருவர் மாறு செய்கின்றனர்). (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 2)

7. எனவே, நபியே! நேர்வழியின் பக்கம் அவர்களை நீர் அழைத்துக் கொண்டே இருப்பீராக! உமக்கு ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக! அவர்களுடைய மனோ இச்சைகளை நீர் பின்பற்றவேண்டாம். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 2)

8. அல்லாஹ்தான் உண்மை அடங்கிய இந்த வேதத்தையும் (நல்லதையும், தீயதையும் பிரித்துக்காட்டும்) தராசையும்,

இறக்கி அருளினான். நபியே! யுகமுடிவு நாள் சமீபத்திலேயே இருக்கலாம். நீர் அறிவீரா? (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 2)

9. யார் மறுமையின் மகசூலை (இவ்வுலகில் நன்மை செய்வதன் மூலம்) விரும்புகிறாரோ, அவரது மகசூலை அவருக்கு அதிகமாக்கித் தருவோம். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 3)

10. யார் இவ்வுலக வாழ்க்கையின் மகசூலை மட்டுமே விரும்புகிறாரோ, அவருக்கு அவற்றை நாம் கொடுத்திடுவோம். மறுமையில் அவருக்கென்று எவ்வித பங்கும் இருக்காது. (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 3)

11. அல்லாஹ் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல் செய்பவர்களின் பிரார்த்தனைகளை ஏற்று, அவர்களுக்குத் தன் அருளை அதிகப்படுத்துகிறான். நிராகரிப்பவர்களுக்கு கடுமையான வேதனையுண்டு. (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 3)

12. அல்லாஹ், தன் அடியார்களுக்கு வாழ்வாதாரத்தை விசாலமாக வழங்கியிருந்தால் அவர்கள் பூமியிலே அட்டூழியம் செய்திருப்பார்கள். ஆகையால்தான், அவன் நாடுகின்ற அளவோடு இறக்கி வைக்கின்றான். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 3)

13. அல்லாஹ், தன் அடியார்களைப் பற்றி நன்கறிந்தவனும், அவர்கள் செயலை உற்று நோக்குபவனும் ஆவான். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 2

**ஈமான் கொண்டு தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பவர்களை பற்றிய விளக்கங்கள் இந்தப் பிரிவின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. குர்ஆன் என்னும் ஒளியின் மூலம் அல்லாஹ் தனது அடியார்களுக்கு நல்வழி காட்டுகிறான். அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் படைத்தவன் என்று மக்கள் நம்பும் அதேவேளையில், அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்கும் தமது மூதாதையர்களின் நடைமுறையை அவர்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறார்கள் என்பதை குறிப்பிட்டு ஸூரா அல்ஜூக்ருஃப் தொடங்குகிறது.**

## தராவிஹ் - 21: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 42, அஷ்ஷூரா; வசனம்: 28 - 53; பிரிவு: 4 - 5

1. **உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதெல்லாம் இவ்வுலக வாழ்க்கையின் (அற்ப) சுகங்களேயாகும். ஈமான் கொண்டு தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பவர்களுக்கு, அல்லாஹ்விடம் இருப்பதே சிறந்ததும், நிலையானதுமாகும். அவர்கள் (எத்தகையோரென்றால்): (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 4)**
    - **அல்லாஹ்வை ஈமான் கொண்டு, அவனையே நம்புவார்கள்.**
    - **பெரும் பாவங்களை விட்டும், மானக்கேடான செயல்களை விட்டும் விலகி இருப்பார்கள்.**
    - **தாம் கோபமாக இருக்கும் போது கூட மன்னித்து விடுவார்கள்.**
    - **இறைவனின் அழைப்புக்கு பதிலளிப்பார்கள்.**
    - **தொழுகையை நிலைநாட்டுவார்கள்.**
    - **தங்களது காரியங்களில் ஆலோசித்து முடிவெடுப்பார்கள்.**
    - **அல்லாஹ் கொடுத்தவற்றிலிருந்து செலவு செய்வார்கள்.**

- தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால், ஒருவருக்கொருவர் உதவிசெய்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

2. அல்லாஹ் மனிதனுக்கு ஏதேனும் ஓர் அருளை வழங்கினால், அதனால் அவன் சந்தோஷமடைகிறான். அவன் செய்த தவறால் ஏதேனும் ஒரு தீங்கு அவனுக்கு ஏற்பட்டால், அப்போது நிச்சயமாக மனிதன் நன்றி கெட்டவனாகி விடுகின்றான். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 5)

3. அல்லாஹ் எந்த மனிதருடனும் நேரடியாக பேசுவது இல்லை. அவன் வஹீயின் மூலமே பேசுவான், அல்லது திரைக்கு அப்பால் இருந்து பேசுவான், அல்லது தான் நாடியதை தன் அனுமதியுடன் வஹீயாக அறிவிக்கின்ற ஒரு தூதர் (வானவர் ஜிப்ரயீல் (அலை)) மூலமாகவே பேசுவான். நிச்சயமாக அவன் உயர்ந்தவன். ஞானமுடையவன். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 5)

4. அல்லாஹ் இந்த குர்ஆனை தனது அடியார்களில், தான் நாடியவருக்கு வழிகாட்டுகின்ற ஒளியாக ஆக்கியுள்ளான். மேலும் நபியே நீங்கள் நிச்சயமாக மக்களுக்கு நேர்வழியைக் காட்டுகின்றீர்கள். (ஸூரா - அஷ்ஷூரா; பிரிவு: 5)

**ஸூரா - 43, அல்ஜுக்ருஃப்; வசனம்: 1 - 25; பிரிவு: 1 - 2**

1. “வானங்களையும், பூமியையும் படைத்தது யார்?” என்று மக்களிடம் கேட்டால் நிச்சயமாக அவர்கள், “வல்லமை மிக்கோனும், நன்கு அறிந்தோனுமாகிய அல்லாஹ்தான் அவைகளைப் படைத்தான்” என்று கூறுவார்கள். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 1)

2. அவனே பூமியை உங்களுக்கு அழகான வாழ்விடமாக்கி, அதில் நீங்கள் (விரும்பிய இடத்திற்குச்) செல்லும் பொருட்டு வழிகளையும் உருவாக்கினான். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 1)

3. அவன்தான் வானத்திலிருந்து மழையை அளவோடு இறக்கி வைக்கிறான். பின்னர், அதனைக் கொண்டு இறந்து கிடந்த பூமியை உயிர்ப்பிக்கின்றான். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 1)

4. அல்லாஹ் எல்லாவற்றையும் ஜோடியாகப் படைத்தான். மேலும் மக்கள் பயணத்திற்காக கப்பலையும், கால்நடைகளையும் படைத்தான். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 1)

5. இதையெல்லாம் புரிந்துகொள்ளாமல், அல்லாஹ்வுடைய அடியார்களில் சிலரை அவனுக்கே அங்கமாக (சந்ததியாக) ஆக்குகிறார்கள். நிச்சயமாக மனிதன் பெரும் நன்றி கெட்டவனாக இருக்கின்றான். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 1)

6. இணை வைப்போரின் வாதம் என்னவென்றால், தங்களுடைய மூதாதையர்கள் பல தெய்வங்களை வணங்கினார்கள். ஆகவே அவர்களின் அடிச்சுவட்டினை தாங்கள் பின்பற்றுகிறோம் என்பதே. (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 2)

7. தெளிவான வழிகாட்டுதலுடனும், எச்சரிக்கையுடனும் இறைத் தூதர்களை அவர்களிடம் அனுப்பியும் கூட, அவர்கள் அப்படியே வாதிடுகின்றனர். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 2)

8. அப்பொழுது அத்தூதர், "உங்கள் மூதாதையரை எந்த வழியில் செல்ல கண்டீர்களோ, அதை விட மேலான நேர்வழியை நான் உங்களுக்குக் கொண்டு வந்திருந்த போதிலுமா?" என்று கேட்டார். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 2)

9. அதற்கு அவர்கள், "நிச்சயமாக நீங்கள் கொண்டுவந்த தூதுச்செய்தியை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்று

சொல்கிறார்கள். ஆகவே, அதற்காக நாம் அவர்களை தண்டித்தோம். நபியே! இறைத்தூதர்களைப் பொய்ப்பித்துக் கொண்டிருந்தவர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதை நீர் கவனிப்பீராக! (ஸூரா - அல்ஜூக்ருஃப்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 3

**யார் அல்லாஹ்வின் நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் ஒரு ஷைத்தானை உற்ற தோழனாக நியமித்திடுவான். மூஸா (அலை) மற்றும் ஃபிர்அவ்னின் வரலாற்றின் மூலம் ஃபிர்அவ்னின் ஆணவப் பேச்சுக்களையும், அதனால் அவன் தனது முடிவை எவ்வாறு சந்தித்தான் என்பதையும் நினைவூட்டுகிறது.**

# தராவிஹ் - 21: (ரக்அத் 9 முதல் 12)

## ஸூரா - 43, அல்ஜுஃக்ருஃப்; வசனம்: 26 - 67; பிரிவு: 3 - 6

1. **யார் அல்லாஹ்வின் நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் ஒரு ஷைத்தானை நியமித்திடுவான். அந்த ஷைத்தான் அவருக்கு உற்ற தோழனாக இருப்பான். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 4)**

2. **ஷைத்தான்கள் அவர்களை நேரான பாதையிலிருந்து தடுப்பார்கள். இவர்களோ, தாம் நல்வழியில் இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்கள். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 4)**

3. **இறுதியாக, கியாமத் நாளில் அவர்கள் தங்களது நிலையை அறிந்தபின்பு ஷைத்தானைப் பார்த்து, “எனக்கும் உனக்குமிடையில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் உண்டான இடைவெளி இருந்திருக்க வேண்டுமே! எங்களை வழிகெடுத்த நீ கெட்ட நண்பன்" என்று கூறுவர். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 4)**

4. **(நபியே!) உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்ட குர்ஆனை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். நிச்சயமாக நீர் நேரான பாதையில் இருக்கின்றீர். (ஸூரா - அல்ஜுஃக்ருஃப்; பிரிவு: 4)**

5. அல்லாஹ், மூஸா (அலை) அவர்களைத் தன் அத்தாட்சிகளுடன் ஃபிர்அவ்னிடமும் அவனது பிரமுகர்களிடமும் அனுப்பினான். ஆனால் அவர்கள் சிரித்தனர். மூஸா (அலை) அவர்களுக்கு ஒன்றைவிட மற்றொன்று சிறந்ததாக இருக்கும் வகையில், அடுத்தடுத்த சான்றுகளை அல்லாஹ் வழங்கினான். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 5)

6. வேதனையால் அல்லாஹ் அவர்களைப் பிடித்த போது, அம்மக்கள் மூஸா (அலை) அவர்களிடம், "சூனியக்காரரே! எங்களுக்காக உம்முடைய இறைவனிடம் பிரார்த்திப்பீராக! நிச்சயமாக, உம்முடைய வழிகாட்டுதலை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்" என்றனர். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 5)

7. அவர்களிடமிருந்து அல்லாஹ் வேதனையை நீக்கிய போது, உடனே அவர்கள் வாக்கு மீறுவார்கள். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 5)

8. ஒரு நாள் ஃபிர்அவ்ன் தம் மக்களிடம், "எகிப்தினுடைய ஆட்சி என்னிடமில்லையா? இந்த ஆறுகள் எனது ஆளுமைக்கு கீழே ஓடவில்லையா? இவற்றை நீங்கள் கண்கூடாக பார்க்கவில்லையா? இழிவானவராகவும், தெளிவாக பேச முடியாதவராகவும் இருக்கக்கூடிய இவரை விட நான் சிறந்தவனில்லையா?" என மூஸா (அலை) அவர்களை காண்பித்துக் கேட்டான். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 5)

9. "இவர் உண்மையாகவே நபி என்றால் இவருக்கு ஏன் தங்கக் காப்பு அணிவிக்கப்படவில்லை. வானவர்கள் ஏன் இவரோடு சேர்ந்து வரவில்லை?" என வினவினான். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 5)

10. இவ்வாறாக தன் மக்களை ஏமாற்று வழியில் செலுத்தி, அவர்களை இலகுவாக நினைத்தான். அம்மக்களும் அவனுக்கு

கட்டுப்பட்டனர். நிச்சயமாக அவர்கள், பாவம் செய்யும் கூட்டத்தினராக ஆகிவிட்டார்கள். (ஸூரா - அல்ஜூக்ருஃப்; பிரிவு: 5)

11. இறுதியாக அல்லாஹ் அவர்களைத் தண்டித்தான். அவர்கள் அனைவரையும் கடலிலே மூழ்கடித்தான். பின்னால் வரும் சமுதாயத்தினருக்கு படிப்பினையாகவும், உதாரணமாகவும் அவர்களை ஆக்கினான். (ஸூரா - அல்ஜூக்ருஃப்; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 4

நியாயத்தீர்ப்பு நாளில் சொர்க்கத்தின் மகிழ்ச்சியும், நரகத்தின் வேதனையும் உடைய இரு வேறுபட்ட காட்சிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கா:.பிர்களின் ஆணவப்போக்கு, :.பிர்அவ்னின் மக்களுக்கு ஏற்பட்ட முடிவையே ஏற்படுத்தும் எனக் கூறி ஸூரா அத்துகான் ஆரம்பமாகிறது. அல்லாஹ் அனைத்தையும் ஒரு நோக்கத்துடன் படைத்துள்ளான். நியாயத் தீர்ப்பு நாள் நல்லவர்களையும், தீயவர்களையும் பிரித்துக் காட்டும். மறுமையில் தீயவர்களின் உணவாக 'ஸக்கூம்' என்னும் கள்ளி மரம் இருக்கும். பயபக்தியாளர்கள் சொர்க்கத்தில் எல்லாவகை உணவுகளுடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

## தராவிஹ் - 21: (ரக்அத் 13 முதல் 16)

ஸூரா - 43, அல்ஜுஃக்ரு:.ப்; வசனம்: 68 - 89; பிரிவு: 7

1. அல்லாஹ்வின் வசனங்களைப் பின்பற்றிய முஸ்லீம்களாக இருந்தவர்களுக்கு, மறுமை நாளில், “இன்று உங்களுக்கு எந்தக் கவலையுமில்லை, பயமுமில்லை. நீங்களும், உங்களுடைய மனைவிமார்களும் சந்தோஷமாக சுவர்க்கத்தில் நுழையுங்கள்” என்று சொல்லப்படும். (ஸூரா - அல்ஜுஃக்ரு:.ப்; பிரிவு: 7)

2. மகிழ்விக்கும் உணவுப் பானங்களுடன் தங்கத் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களை வலம் வரும். மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அங்கு இருக்கும். "உலகில் நீங்கள் செய்த நற்காரியங்களால் உங்களுக்கு இந்த சுவர்க்கம் வழங்கப்பட்டுள்ளது” என்று அவர்களிடம் சொல்லப்படும். (ஸூரா - அல்ஜுஃக்ரு:.ப்; பிரிவு: 7)

3. நிச்சயமாக, குற்றவாளிகள் நரக வேதனையில் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்களுக்கு அ(வ்வேதனையான)து குறைக்கப்பட மாட்டாது. அதில் அவர்கள் நம்பிக்கையையும் இழந்து விடுவார்கள். (ஸூரா - அல்ஜுஃக்ரு:.ப்; பிரிவு: 7)

4. அவர்கள் நரகத்தின் காவலரிடம், "யா மாலிக்! உமது இறைவன் எங்கள் தண்டனையை முடிக்கட்டுமே!" என்று கோருவார்கள். அதற்கு அவர், "இல்லை, நிச்சயமாக நீங்கள் இங்குதான் தங்கியிருப்பீர்கள்" என்று கூறுவார். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 7)

5. நபியே! நீர் கூறுவீராக! "அல்லாஹ்வுக்கு குழந்தை இருந்தால் நானே அதை வணங்குவோரில் முதல் ஆளாக இருப்பேன்". (ஆனால், அது உண்மை இல்லை. அதை நானே முதல் ஆளாக மறுக்கிறேன்). (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 7)

6. அவன் தூயவன். அவனே வானங்களுக்கும், பூமிக்கும் இறைவன். அரியணையின் அதிபதி. அவர்களின் பொய்யான வர்ணனைகளிருந்து அவன் தூயவன். (ஸூரா - அல்ஜுக்ருஃப்; பிரிவு: 7)

**ஸூரா - 44, அத்துகான்; வசனம்: 1 - 59; பிரிவு: 1 - 3**

7. ஹா, மீம்! தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக! நாம் இதை அருள்வளம் மிக்க (லைலத்துல் கத்ர்) இரவிலே இறக்கினோம். அதன் மூலம் அச்சமூட்டி எச்சரித்துக் கொண்டே இருக்கின்றோம். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 1)

8. காஃபிர்கள் சந்தேகத்திலேயே விளையாடிக் கொண்டிருக்கின்றனர். வானம் தெளிவான புகையைக் கொண்டு வரும் நாளை எதிர்பாருங்கள். அது மக்களைச் சூழ்ந்து கொள்ளும். அது நோவினை தரும் வேதனையாகும். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 1)

9. அவர்கள் கஷ்டத்திலிருக்கும் போது அதனை அல்லாஹ் நீக்கிடுவான். (அரேபிய மக்களுக்கு கடும் பஞ்சம் ஏற்பட்டபோது அவர்களது தலைவர்கள், நபி (ஸல்)

அவர்களிடம் வந்து, உங்களுடைய இறைவனிடம் பிரார்த்தித்து இந்தக் கடும் வேதனையை நீக்கிடுமாறு கேட்டுக் கொண்டார்கள்). ஆனாலும் அவர்கள் மீண்டும் பழைய பாதையையே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 1)

10. இது போலவே ஃபிர்அவ்னுடைய மக்களுக்கும் சோதனை அனுப்பப்பட்டது. கண்ணியமான தூதர் (மூஸா (அலை)) அவர்களிடம் வந்தார். அவர், "என்னிடம் நீங்கள் அல்லாஹ்வின் அடியார்களை ஒப்படைத்து விடுங்கள். அவர்கள் உண்மையான இறைவனை வணங்கட்டும்", என்றார். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 1)

11. ஆனால் அவர்கள் வரம்பு மீறியவர்களாகவே இருந்தார்கள். இறைவன் ஃபிர்அவ்னையும், அவன் படையினரையும் கடலில் மூழ்கடித்தான். அவர்கள் எத்தனையோ தோட்டங்களையும், நீர் ஊற்றுக்களையும் விட்டுச் சென்றார்கள். எத்தனையோ விளைநிலங்களையும், நேர்த்தியான மாளிகைகளையும் விட்டுச் சென்றார்கள். அவர்கள் இன்பமாக அனுபவித்துக் கொண்டிருந்த சுகங்களையும் விட்டுச் சென்றார்கள். அவர்களின் முடிவு இவ்வாறே ஆனது. (ஸூரா - அத்துகான்; பிரிவு: 1)

12. வானங்களையும், பூமியையும், இவ்விரண்டிற்கும் இடையே உள்ளவற்றையும் விளையாட்டிற்காக நாம் படைக்கவில்லை. (ஸூரா - அத்துகான்; பிரிவு: 2)

13. இவ்விரண்டையும், ஒரு சத்தியமான நோக்கத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். எனினும் அவர்களில் பெரும்பாலோர் அறிவதில்லை. (ஸூரா - அத்துகான்; பிரிவு: 2)

14. நியாயத் தீர்ப்புக்குரிய மறுமை நாள்தான் நிச்சயமாக அவர்கள் யாவருக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரமாகும். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 2)

15. அந்த நாளில் எந்த நண்பனும், எந்த நண்பனுக்கும் பயனளிக்க முடியாது. அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காது, அல்லாஹ் யாருக்கு கிருபை செய்துள்ளானோ அவர்களைத் தவிர. நிச்சயமாக அல்லாஹ்தான் வலிமை மிக்கவன்; கிருபையாளன். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 2)

16. உறுதியாக 'ஸக்கூம்' என்னும் கள்ளி மரமே மறுமையில் பாவிகளின் உணவாக இருக்கும். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

17. அது எண்ணெய் கசடு போலிருக்கும். சூடேறிய தண்ணீர் கொதிப்பதுபோல, அவர்கள் வயிறுகளில் கொதிக்கும். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

18. "அவனைப் பிடித்து நரகத்தின் மையப்பகுதிக்கு கொண்டு செல்லுங்கள். பிறகு வேதனையளிக்கின்ற கொதிக்கும் நீரை அவன் தலையில் ஊற்றுங்கள்" எனக் கூறப்படும். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

19. பயபக்தியாளர்கள் பாதுகாப்பான இடத்தில் இருப்பார்கள். சுவனச் சோலைகளிலும், நீர் ஊற்றுகளிலும் இருப்பார்கள். உயர் ரக, பட்டாடை அணிந்து ஒருவரை ஒருவர் முகம் நோக்கி இருப்பார்கள். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

20. ஹூருல்ஈன் (கண்ணகிகள்) என்கின்ற சுவனத்து அழகிகளை அவர்களுக்கு துணையாக்கப்படும். அங்கு அவர்கள் முழு நிம்மதியுடன் அனைத்து பழ வகைகளை கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள். முந்திய மரணத்தைத் தவிர, அங்கு மரணத்தை

அவர்கள் அனுபவிக்கமாட்டார்கள். (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

21. நபியே! இந்த வேதத்தை நாம் உமது மொழியில் எளிதாக்கினோம். மக்கள் படிப்பினை பெற வேண்டுமென்பதற்காக. (ஸூரா - அத்துகான்; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 5

**இந்த குர்ஆன் நம்பிக்கையாளர்களுக்கு வழிகாட்டியாகவும், அதை நிராகரிப்பவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு என்பதையும் விளக்கி, ஸூரா அல்ஜாஸியா தொடங்குகிறது. கியாமத் நாளில், ஒவ்வொரு சமுதாயத்தவர்களும் முழங்காலிட்டவர்களாக இருப்பர். ஒவ்வொருவரும் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.**

## தராவிஹ் - 21: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 45, அல்ஜாஸியா; வசனம்: 1 - 37; பிரிவு: 1 - 4

1. ஹா, மீம்! இந்த குர்ஆன், வல்லமை மிக்க, நுட்பமான அறிவுடைய அல்லாஹ்விடமிருந்து இறக்கி அருளப்பட்டுள்ளது. (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 1)

2. "யார் அல்லாஹ்வின் திருவசனங்களை கேட்டு, பிறகு கேட்காதவனைப் போல ஆணவத்துடன் பிடிவாதம் செய்கிறானோ, அவனுக்கு நோவினை தரும் வேதனை உண்டு", என அறிவிப்புச் செய்யுங்கள். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 1)

3. யார் நற்காரியங்கள் செய்கிறாரோ அதன் பலன் அவருக்கே. யார் தீமையைச் செய்கிறாரோ, அதன் கேடு அவருக்கேயாகும். பின்னர் உங்கள் இறைவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 2)

4. நிச்சயமாக அநியாயக்காரர்களில் சிலர் சிலருக்குப் பாதுகாவலர்களாக இருக்கிறார்கள். ஆனால் பயபக்தியுடையவர்களுக்கு அல்லாஹ்வே பாதுகாவலன் ஆவான். குர்ஆன் மனிதர்களுக்கு தெளிவு தரும் சான்றுகளாகவும், நேர்வழியாகவும் உள்ளது. இது உறுதிகொள்ளும் மக்களுக்கு அருளாகவும் திகழ்கின்றது. (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 2)

5. அல்லாஹ், வானங்களையும், பூமியையும் உண்மையா(ன காரணத்துக்கா)கப் படைத்துள்ளான். அது, ஒவ்வொரு ஆன்மாவும் அது செய்தவற்றுக்கான பிரதிபலன் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே. அதில் அவர்கள் அநீதி இழைக்கப்படமாட்டார்கள். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 3)

6. நபியே! கியாமத் நாளில், ஒவ்வொரு சமுதாயத்தவரையும் முழங்காலிட்டவர்களாக நீர் காண்பீர். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 4)

7. ஒவ்வொரு சமுதாயமும் அவர்களுடைய பதிவு புத்தகத்தின் பக்கம் அழைக்கப்படுவார்கள். "நீங்கள் உலகில் செய்தவற்றுக்காக கூலி இன்று வழங்கப்படும். இந்த பதிவேடு உங்களைப் பற்றிய உண்மையைக் கூறும். நிச்சயமாக நீங்கள் செய்தவைகளை இங்கு பதிவு செய்து வைத்துள்ளோம்" என்று கூறப்படும். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 4)

8. வானங்களின் இறைவனும், பூமியின் இறைவனும், அகில உலகத்தாரின் இறைவனுமான அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். (ஸூரா - அல்ஜாஸியா; பிரிவு: 4)

---